**பாததும்பர பிரதேச சபை - 2023**
-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாததும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் உட்பட நிதிக்கூற்றுக்களுக்கு உரிய உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பாததும்பர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் வைப்புக் கணக்கு மீதியாகிய ரூபா 4,732,957 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியம் என கணக்கீடு செய்யாமல் பொது வைப்பு மீதியொன்றென காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் சரியாக கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது வாகனங்கள் சேவை நிலையம் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,800,000 தொகைக்கு பதிலாக ரூபா 380,000 தொகை என | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனப்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 3,420,000 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ரூபா 1,658,539 இற்கான 02 நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 486,750 தொகைக்கான வாகன சேவை நிலைய கடன்கொடுத்தோர் மீதியொன்றினை இரண்டு முறை கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 2,145,289 தொகை கடன்கொடுத்தோர் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 15 கணக்கு விடயங்களின் மீதிகள் துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 92,650,087 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணம் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 11,290,290 இற்கான 02 சொத்துக்கள் மீதிகள் மற்றும் பொறுப்பு மீதியொன்று தொடர்பாக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் பதிவேடு சரியாக பேணிச் செல்லப்படும் என. | சரியாக பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | |
| | நி.பி. 571(3) | 2012 முதல் முன்னைய ஆண்டு வரையான காலப்பகுதியில் காலவதியாகிய ரூபா 1,928,438 இற்கான 32 பலவின வைப்புக்கள், 08 கடை வாடகைகள் மற்றும் 06 நிர்மாண வேலை தடுத்து வைத்தல் பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(ஆ)** | **மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| | 2018 ஏப்ரல் 24 ஆந் திகதிய 2018/05 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | உள்ளூராட்சி ஆணையாளரின் பூர்வாங்க அங்கீகாரமின்றி குண்டசாலே பிரதேச சபை மற்றும் பாததும்பர பிரதேச சபை ஒன்றித்து பேணிச் செல்லும் யப்பான் தொழிநுட்ப சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக சபையின் பெண் செயலாளரினால் 2017 முதல் 2020 வரை 05 நபர்களை முறைசாரா விதமாக சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,985,733 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 26,164,031 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,529,254 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 5,793,650 | 7,156,980 | 7,221,788 | 4,854,409 | 57,793,650 | 5,911,146 | 4,334,691 | 4,919,216 |
| ii. | வாடகை | 4,273,152 | 5,064,798 | 4,804,288 | 634,069 | 5,187,560 | 4,185,954 | 4,632,263 | 373,559 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,180,000 | 3,180,000 | 3,572,481 | - | 2,728,000 | 2,728,000 | 3,873,232 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 70,363,413 | 28,801,367 | 24,620,069 | 95,044,320 | 47,585,763 | 75,798,623 | 57,962,808 | 90,863,022 |
| | | 83,610,215 | 44,203,145 | 40,218,626 | 100,532,798 | 113,294,973 | 88,623,723 | 12,908,149 | 96,155,797 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி வரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 4,854,409 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 143 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,270,284 தொகை மற்றும் இரண்டு அரச நிறுவனங்களில் இருந்து ரூபா 5,000 இனை விட மிகையாக ரூபா 35,596 தொகையொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வீதவரி அறவீடு செய்ய வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 1,774,828 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் நிலுவை நீர்கட்டணம் ரூபா 5,000 இனை மிகைத்துள்ள 48 நீர் நுகர்வு அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 460,602 தொகையாக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,476,000 தொகைக்கான 912,000 லீற்றர் நீர் நீர்வழங்கள் சபையில் இருந்து பெற்றுக் கொண்டு எதுவித செய்முறையும் கடைபிடிக்கப்படாமல் இலவசமாக வினியோகிக்கப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 162,998 தொகை முத்திரைக் கட்டணம் ரூபா 93,206,494 தொகையாகும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 93 (ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்திலுள்ள வீடுகளின் மலக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் சுத்தம் செய்தல் மற்றும் காலியாக்கக் கூடியவாறு சாக்கடை வண்டி சேவையொன்று பேணிச்சென்றிருக்கவில்லை. | கழிவுநீர் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மடவளை பொது வர்த்தக கட்டிடத் தொகுதியில் 2003 ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த 23 கடையறைகளை உடைத்து அகற்றுவதற்காக ரூபா 75,308,678 இற்கான மதிப்பீடொன்று மீது புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு வர்த்தகக் கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பதற்காக கட்டிடக்கலை மதியுரையாளர் கட்டணம் என ரூபா 108,000 தொகையும், பொறியியலாளர் மதியுரை கட்டணம் என ரூபா 100,000 தொகை மற்றும் நில அளவை அலுவல்களுக்காக ரூபா 47,000 தொகையாக ரூபா 255,000 தொகை 2020-2021 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட வரைபு பாதைக்கோட்டு எல்லைக்குள் அடங்கியிருந்த காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வரைபினை பரிந்துரைக்காமையால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற செலவொன்றாகும். | எதிர்காலத்தில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும் என. | முன்னராகவே அங்கீகரிக்கப்பட வேண்டிய வரைபுகள் அங்கீகரிக்கப்பட்டு சாத்தியக்கூறு ஆய்வு மீது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கடைகள் வாடகைக்கு கொடுக்கும் போது முறையான ஆய்வொன்று மேற்கொள்ளாத காரணத்தினால் இரண்டு தடவைகள் பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 116,713 தொகை சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | குறைபாடொன்று ஏற்பட்டிருந்தது என. | முறையான ஆய்வொன்றுடன் செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சிக் கடை மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு கொடுக்கும் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த டெண்டர் பத்திரங்கள் போலியான முறையில் | உள்ளுராட்சி ஆணையாளரை அறிவுருத்தி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறைப்பிரகாரம் டெண்டர் நடவடிக்கை முறை கடைபிடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றப்பட்டு கூடிய விலை சமர்ப்பித்திருந்த ரூபா 3,100,000 இற்கான டென்டரை ஏற்றுக் கொள்ளாமல் ரூபா 2,811,000 டென்டரை ஏற்றுக் கொண்டிருந்தமையால் ரூபா 289,000 தொகை சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கணிப்பீட்டு அறிக்கையின் படி 06 நூலகங்களில் ரூபா 128,758 தொகை பெறுமதியான 654 புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 94,750,869 தொகை காணப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 3 வருடங்களுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 111,545 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 3,585,702 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 20,051,059 தொகையாக காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காலப் பகுப்பாய்வின் படி 3 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,000 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 2,911,545 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | தும்பர வாகனசேவை நிலையம் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை முறையான திட்டமொன்று மற்றும் முகாமைத்துவமின்றி செயற்படுத்தப்பட்டமையால் | உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலாபம் உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 505,938 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்காததுடன், 13 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு ஆவணப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச்செல்ல வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் நீர்த் திட்டம் ஒன்றிற்காக நீர்ப் பம்பொன்று கொள்வனவு செய்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 200,000 இற்கான தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் வைப்புக்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பணம் குறிக்கோள்சார் கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைத்திருந்த 115 பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக தொடர்நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | பொதுமக்கள் முறைப்பாடுகளை பரிசோதனை செய்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக கடந்த 05 வருடங்களில் 786 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 731 இனால் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் அது தொடர்பாக தொடர்நடவடிக்கை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2019 ஆண்டு நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த வாகனத் தரிப்பிடத்திற்காக பொருத்தமான காணியொன்று இனங்காணாமல் மடவளை கால்வாயின் காப்புப் பிரதேசத்தில் முறைசாரா விதமாக நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பிரதேச செயலாளரினால் இந்த நிர்மாண வேலையை அங்கீகரித்திருக்கவில்லை. 2020 மற்றும் 2023 ஆண்டுகளின் போது இந்த காணியின் நில அளவை அலுவல்களுக்காக ரூபா 825,255 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | பொருத்தமான காணியொன்று தெரிவு செய்து நிர்மாணவேலை அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | குண்டசாலே பிரதேச சபை மற்றும் மற்றும் பாததும்பர பிரதேச சபை இணைந்து செயற்படுத்தப்படுகின்ற ஜப்பான் தொழிநுட்ப வாயு தன்னியக்க மற்றும் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2016 ஒக்தோபர் 12 திகதி இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்றிற்கு இரு தரப்பினரும் கையொப்பமிட்டிருந்த 2022 ஜுலை மாதம் முதல் குண்டசாலே பிரதேச சபையினால் உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை மீறியமையால் ஏற்பட்டுள்ள நிதிநட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சிக்கலொன்று ஏற்பட்டபோது செயற்பட வேண்டிய முறை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய மீளாய்வாண்டு இறுதியளவிலும் இந்த சிக்கலை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதியை இனங்கண்டிருக்காத லொறி வண்டியொன்று மற்றும் நீர்பவுசர் மற்றும் ரூபா 1,600,000 தொகை பெறுமதியான கப்வண்டியொன்று 1 வருடம் முதல் 14 வருடம் வரையான காலவீச்சு முதல் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | பொறுத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு மற்றும் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்பட்டிருந்த 5 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறைப்பிரகாரம் உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 06 காணிகள் மற்றும் 10 மயானங்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறைப் பிரகாரம் உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்ய போது அவற்றில் 11 பதவிகளில் 16 வெற்றிடங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 09 மிகைகளும் காணப்பட்டது. | வெற்றிடங்களுக்காக உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் மிகைப் பதவியணியினை கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் படி குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதியின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |